
**நவம்பர் – 12**

# தமிழ்நாடு செய்திகள்

## 17வது வனவிலங்கு சரணாலயம்




- காவிரி தெற்கு வனவிலங்குச் சரணாலயத்தை மாநிலத்தின் 17வது வனவிலங்கு சரணாலயமாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
- இந்தச் சரணாலயம், கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள பாதுகாக்கப் பட்ட வனப்பகுதிகளை உள்ளடக்கியது.
- இது 35 வகையான பாலூட்டிகள், 238 வகையான பறவைகள் மற்றும் சிவப்பு நிறப் பட்டியலில் இடம் பெற்ற பிற இனங்கள் உள்ளன.
- மலை மகாதேஷ்வரா வனவிலங்கு சரணாலயம், கர்நாடகாவில் உள்ள பில்லிகிரி ரங்க சுவாமி கோயில் புலிகள் காப்பகம் மற்றும் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் மற்றும் ஈரோடு மாவட்டம் ஆகியவற்றுடன் இந்த நிலப்பரப்பு நீலகிரி உயிர்க் கோளத்துடனான இணைப்பினைக் கொண்டுள்ளது.
- நந்திமங்கலம்-உலிபண்டா வழித்தடம் மற்றும் கோவைப் பள்ளம்-அனேபித்தஹல்லா ஆகிய இரண்டு முக்கியமான மற்றும் பெரிய யானை வழித்தடங்கள் இந்தப் பகுதியில் அமைந்துள்ளன.

## சொந்த வரி வருவாயில் மூன்றாவது பெரிய மாநிலம்

- நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில் சொந்த வரி வருவாய் வசூல் அடிப்படையில் கர்நாடகாவை விஞ்சி தமிழகம் மூன்றாவது பெரிய மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- இம்மாநிலத்தின் வருவாயானது பெரும்பாலும் மதுபான விற்பனை மீதான கலால் வரி மூலம் பெறப் படுகிறது.
- மகாராஷ்டிரா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இதில் முதல் இரண்டு

இடங்களைப் பிடித்துள்ளன.

**A substantial rise**

The tax collection in Tamil Nadu has increased by over 50% in the first quarter of fiscal 2023

| | Q1 2023 | Q1 2022 | % change |
|---|---|---|---|
| State Goods and Services Tax | 13692.84 | 9224.11 | 48.4 |
| Stamps and Registration Fees | 4457.95 | 2314.46 | 92.6 |
| Land Revenue | 58.46 | 38.07 | 53.5 |
| Taxes on Sales, Trade etc | 13119.24 | 9484.81 | 38.3 |
| State Excise Duties | 2594.55 | 1199.23 | 116.3 |
| **Total** | **33923.04** | **22260.68** | **52.3** |

(IN ₹ CRORE) SOURCE: COMPTROLLER AND AUDITOR GENERAL OF INDIA

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் 50வது தலைமை நீதிபதி



- இந்தியாவின் 50வது தலைமை நீதிபதியாக நீதிபதி D.Y. சந்திரசூட் பொறுப்பேற்றார்.
- உதய் உமேஷ் லலித் அவர்களுக்குப் பிறகு, அவர் இரண்டு ஆண்டுகளுக்குத் தலைமை நீதிபதியாகப் பணியாற்றுவார்.
- அயோத்தி நில ப்பிரச்சனை, தனியுரிமை மற்றும் திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவுகள் தொடர்பான உரிமை உள்ளிட்டவை தொடர்பான பல்வேறு அரசியலமைப்பு அமர்வுகள் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் முக்கியத் தீர்ப்புகளில் அவர் ஒரு பகுதியாக இருந்துள்ளார்.
- இவரது தந்தை Y.V. சந்திரசூட் அவர்களும் இந்தியத் தலைமை நீதிபதியாகப் பணி

ஆற்றியுள்ளார்.

- இந்திய நாட்டின் நீதித்துறை வரலாற்றில் தலைமை நீதிபதிப் பதவியில் இடம் பெற்ற ஒரே தந்தை-மகன் இணையர் இவர்களே ஆவர்.

## 22வது சட்ட ஆணையம்



- இந்தியாவின் 22வது சட்ட ஆணையமானது இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு, நீதிபதி (ஓய்வு) ரிதுராஜ் அவஸ்தி அவர்களின் தலைமையில் அமைக்கப் பட்டுள்ளது.
- நீதிபதி அவஸ்தி 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்று, அதன் பிறகு இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் ஓய்வு பெற்றார்.
- கல்வி நிறுவனங்களில் பெண்கள் மற்றும் சிறுமிகள் ஹிஜாப் அணிவதற்கு மாநில அரசு விதித்த கட்டுப்பாட்டை உறுதி செய்யும் அமர்விற்கு அவர் தலைமை தாங்கினார்.
- இந்திய சட்ட ஆணையம் என்பது இந்திய அரசின் அறிவிப்பின் மூலம் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப் பூர்வமல்லாத அமைப்பாகும்.
- சட்ட ஆணையமானது, முதன்முதலில் 1955 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், இந்த ஆணையமானது இதுவரை 277 அறிக்கைகளைச் சமர்ப்பித்து உள்ளது.
- உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி B.S. சவுகான் தலைமையிலான 21வது சட்ட ஆணையத்தின் பதவிக் காலம் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் தேதியன்று முடிவடைந்தது.

## இந்தியாவின் முதல் மிதக்கும் நிதி கல்வியறிவு முகாம்

- சமீபத்தில், இந்தியத் தபால் பண வழங்கீட்டு வங்கியானது (IPPB) இந்தியாவின் முதல் மிதக்கும் நிதி கல்வியறிவு முகாமை நடத்தியது.
- ஸ்ரீநகரில் பெண்களின் நிதி கல்வியறிவை மேம்படுத்துவதற்காக 'பெண்களால், பெண்களுக்காகவே' தொடங்கப்பட்ட 'நிவேஷக் திதி' என்று அழைக்கப்படும் இந்த முன்னெடுப்பானது மேற்கொள்ளப்பட்டது.

- பெரு நிறுவன விவகார அமைச்சகத்தின் கீழ் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்துடன் (IEPFA) இணைந்து இந்திய தபால் பண வழங்கீட்டு வங்கியினால் இந்த முன்னெடுப்பானது தொடங்கப்பட்டது.



## G20 அமைப்பிற்கு இந்தியாவின் தலைமை




- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைக் காலத்திற்கான முத்திரை, கருத்துரு மற்றும் இணைய தளத்தைப் பிரதமர் வெளியிட்டார்.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைப் பதவி காலத்திற்கான முத்திரை, கருத்துரு மற்றும் இணைய தளம் ஆகியவை இந்தியாவின் "செய்தி மற்றும் மாபெரும் முன்னுரிமைகளை" உலகிற்கு எடுத்துரைக்கின்றன.
- தற்போதைய தலைமையினை வகிக்கும் இந்தோனேசியாவிடமிருந்து டிசம்பர் 01 ஆம் தேதி இந்தப் பதவியினை இந்தியா ஏற்க உள்ளது.
- G20 அல்லது குழு 20 என்பது உலகின் முக்கிய வளர்ச்சிப் பெற்ற மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் அரசுகளுக்கிடையேயான மன்றமாகும்.
- இது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 85%, உலகளாவிய வர்த்தகத்தில் 75% மற்றும் உலக மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கைக் கொண்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கங்கை நதியில் ஓங்கில்கள்

- கங்கை நதியில் ஏற்பட்ட மாசு காரணமாக காணாமல் போன ஓங்கில்கள், ஆற்று நீரின்

தரத்தில் மேற்கொள்ளப்பட்ட தூய்மை நடவடிக்கைகள் காரணமாக மீண்டும் வரத் தொடங்கியுள்ளன.

- பிரிஜ்காட், நரோரா, கான்பூர், மிர்சாபூர், வாரணாசி ஆகிய இடங்களிலும் ஓங்கில்கள் இனப்பெருக்கம் செய்கின்றன.
- தற்போது உத்தரப் பிரதேச மாநிலப் பகுதியில் பாயும் கங்கை நதியில் உள்ள ஓங்கில்களின் எண்ணிக்கை சுமார் 600 என மதிப்பிடப் பட்டுள்ளது.




## சூடோஹெலிஸ் அண்ணாமலை



- தமிழ்நாட்டின் கடலூர் மாவட்டத்தில் சூடோஹெலிஸ் அண்ணாமலை என்ற ஒரு புதிய வகை கழிமுக நண்டு கண்டுபிடிக்கப்பட்டது.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகமானது, ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறைகளில் 100 ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் சேவைக்கு மதிப்பளிக்கும் விதமாக இந்த இனத்திற்கு இப்பெயரானது சூட்டப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய இனமானது, இந்தியத் துணைக் கண்டம் மற்றும் கிழக்கு இந்திய பெருங் கடல் ஆகியப் பகுதிகள் முழுவதும் பரவிக் காணப்படுகின்றன.

- இதற்கு முன், சூடோஹெலிஸ் இனத்திலிருந்து இரண்டு இனங்கள் மட்டுமே கண்டறியப் பட்டுள்ளன.
- அவை சூடோஹெலிஸ் சப்குவாட்ராட்டா மற்றும் சூடோஹெலிஸ் லாட்ரீலி ஆகியன ஆகும்.

# மாநிலச் செய்திகள்

## உலகின் முதல் வேத கடிகாரம்

- மத்தியப் பிரதேசத்தின் உஜ்ஜைனி நகரில் உலகின் முதல் வேதக் கடிகாரம் ஆனது விரைவில் அமைக்கப்பட உள்ளது.
- இது சூரியனின் நிலையுடன் ஒத்திசைந்து இயக்கப்படும்.
- உஜ்ஜயினியில் உள்ள 300 ஆண்டுகள் பழமையான ஜிவாஜி ஆய்வகத்தில் இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.
- இந்த (விக்ரமாதித்யா) வேதக் கடிகாரம் ஆனது 24 முஹூர்த்தங்களாக (மணிநேரம்) பிரிக்கப் படும்.



## கிராம வண்டி – கேரளா





- கேரள மாநில சாலைப் போக்குவரத்துக் கழகமானது மாநில அளவிலான உள்ளூர்

சுயாட்சி அமைப்புகளுடன் இணைந்து, "கிராம வண்டி" எனப்படும் திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.

- சமீபத்தில், "சிறந்த பொதுப் போக்குவரத்து அமைப்பு" கொண்ட நகரத்துக்கான "நகர்ப்புற போக்குவரத்தில் பாராட்டு விருதானது" இந்த கழகத்திற்கு வழங்கப்பட்டது.
- இந்த விருதானது மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தால் நிறுவப் பட்டது.
- அனைத்து இந்திய நகரங்களிலும் பொதுப் போக்குவரத்தை மேம்படுத்தச் செய்யும் நோக்கத்தில் செயல்படுத்தப் பட்டுள்ள திட்டங்கள் இந்த விருதிற்காக கருத்தில் கொள்ளப் பட்டன.

## நாட்டின் மிகப்பெரிய மியாவாக்கி பூங்கா




- நாட்டின் மிகப்பெரிய மியாவாக்கி நகர்ப்புற வனப்பகுதியானது, 18 ஏக்கர் பரப்பளவில் ஹைதராபாத்தில் உள்ள கவாகுடாவில் அமைந்துள்ளது.
- இது நாட்டின் மிகப்பெரிய மியாவாக்கி காடாக உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து குஜராத்தில் 14 ஏக்கர் பரப்பளவில் காணப் படுகின்ற ஒன்றும் உள்ளது.
- ஜப்பானியத் தாவரவியலாளரான அகிரா மியாவாக்கி என்பவரால் இந்த மியாவாக்கி முறையானது அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்த முறையானது பூர்வீக உள்ளூர் தாவரங்களைக் கொண்டு அடர்ந்த, வேகமாக வளரும் காடுகளை உருவாக்க உதவுகிறது.

## ஒரே மாதிரியான தங்க விலை நிர்ணயம்

- இந்தியாவில் வங்கி விகிதத்தின் அடிப்படையில் ஒரே மாதிரியான தங்க விலையை அறிமுகப் படுத்திய முதல் மாநிலம் கேரளாவாகும்.
- இந்த ஒரே மாதிரியான விலை நிர்ணயமானது, 916 தரம் கொண்ட தூய்மையான 22 காரட் தங்கத்துக்குப் பொருந்தும்.
- பொதுவாக, தங்கத்தின் விலையானது வங்கி விகிதத்தை விட கூடுதலாக ஒரு

கிராமுக்கு ரூ.150-300 அளவில் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது.

- தங்கத்தின் மீதான வங்கி விகிதங்கள், சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் இறக்குமதி வரி உள்ளிட்ட பிற வரிகள் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியாக விதிக்கப்பட்டுள்ளன.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகள் 2021

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், 2021 ஆம் ஆண்டிற்கான 'தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகளை' வழங்கினார்.
- இது உத்தரகாண்ட் மாநிலத்தின் குமாவோனைச் சேர்ந்த இரண்டு செவிலியர்களான சஷிகலா பாண்டே மற்றும் கங்கா ஜோஷி ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
- தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகளானது சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தினால் 1973 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது சமூகத்தில் செவிலியர்கள் மற்றும் செவிலியர் வல்லுநர்கள் ஆற்றியச் சிறப்பான சேவைகளுக்கான அங்கீகாரமாகும்.



# இதரச் செய்திகள்

## வெங்கடேஸ்வரா கோவிலின் நிகர மதிப்பு




- திருப்பதி வெங்கடேஸ்வரா கோவிலின் நிகர மதிப்பு ரூ.2.5 லட்சம் கோடிக்கு மேல் (சுமார் 30 பில்லியன் டாலர்கள்) பதிவாகியுள்ளது.
- திருமலை திருப்பதி தேவஸ்தானங்கள், 1933 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதிலிருந்து

முதல் முறையாக அதன் நிகர மதிப்பை அறிவித்துள்ளது.

- திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான சொத்துக்களில் நிலப் பகுதிகள், கட்டிடங்கள், வங்கிகளில் உள்ள பணம் மற்றும் தங்க வைப்புத் தொகைகள், பக்தர்கள் கோயிலுக்கு வழங்குகின்ற காணிக்கைகள் ஆகியவை அடங்கும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★